[1975 ஏப்ரல் 19

Family Benefit Scheme for Power Board Staff.

*729 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Family Benefit Fund Scheme now in force for Government Servants has been extended to Power Board Staff ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : ஆம். குடும்ப நல நிதி திட்டம் 21–6–1974-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் செயல்படுத்தப்படுகின்றது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மாத ஊதியம் பெறும் பணியாளர் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் வருகின்றனர். மாதம் ரூ. 10 சந்தாவாக செலுத்தும் ஓய்வூதியம் வழங்கப்படும் பணியின் கீழ்வராத பணியாளர்கள் அயலிடப்பணியிற் சென்றுள்ள வாரியப் பணியாளர்கள், அல்லது முகமையிற் சென்றுள்ள வாரியத்தின் பணியாளர்கள், வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும் முறையான பணியிலுள்ள ஊழியர்கள், தற்காலிகப் பணி அமைப்பிலுள்ள ஊழியர்கள் ஆகியோரும் இத்திட்டத்தின்கீழ் வருகின்றனர்.

திரு. எம். சுரேந்திரன் : இப்படி மின்சார வாரியப் பணியாளர்களுக்கு இருப்பதுபோல் இதர பல வாரியங்களில், டிரான்ஸ்போர்ட் வாரியம் போன்று இருக்கின்ற வாரியங்களில் இருப்பவர்களுக்கும் இது பொருந்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திருச்சிராப்பள்ளியில் திராட்சை பயிரிடல்

*730 வினா— திரு. பெ. சௌந்தர பாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், திராட்சை பயிரிடுதலை ஊக்குவிப்பதற்கான திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்படவிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

1975 ஏப்ரல் 19]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திருச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் தனியார் திராட்சை பயிரிடுகிறார்கள். அரசாங்கம் பல பயிர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உதவி செய்து வருகிறது. அதே போல் திராட்சைப் பயிரிடுவோருக்கு, உதவி செய்ய அரசாங்கம் இனிமேலாவது பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திராட்சைப் பயிருக்கு தற்போது திருச்சி மாவட்ட கூட்டுறவு வங்கி கடன் உதவி செய்து வருகிறது. ஏக்கருக்கு 675 ரூபாய் அளவுக்குக் கடன் கொடுக்கிறது. அதைத் தவிர எந்தத் திட்டமும் திருச்சி மாவட்டத்திற்கு இல்லை.

திரு. தி. பொன்னுமலை : திராட்சை ஒரு ஏக்கரில் பயிரிட பத்தாயிரம் ரூபாய் செலவாகிறது. அதிலே பாதி ரூபாய் அரசாங்கம் மானியமாகக் கொடுத்தால் விவசாயிகள் ஊக்கமாக அதைப் பயிரிடுவார்கள். அதைப் பயிரிட்டு இரண்டு மூன்று ஆண்டு காலம் ஆனவுடன் இப்படிப்பட்ட வறட்சி ஏற்பட்டால் பத்தாயிரம் ரூபாயும் நஷ்டமாகிவிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. அந்தநிலையில் அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் திராட்சையைப் பொறுத்தவரை இன்னும் அமலுக்கு வரவில்லை. சேலம் மாவட்டத்தில் திராட்சைப் பயிர் செய்கிறவர்களுக்கு 1,750 ரூபாய் வரையில் ஏக்கர் ஒன்றுக்கு மத்திய கூட்டுறவு வங்கி மூலம் பயிர்க் கடன் கொடுக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறை பொறுப்பேற்ற பிறகு பல விவசாய பயிர்கள் மீது ஆராய்ச்சியைப் மேற்கொண்டிருக்கிறார்கள். அதே போன்று திராட்சைப் பயிரைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது ஆராய்ச்சி செய்ய ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது திருச்சி மாவட்டத்தில் திராட்சைப் பயிருக்கான திட்டம். திராட்சைப் பயிரைப் பற்றி ஆராய்ச்சி நடந்து, பலவகையான திராட்சை வகைகளில் தமிழ்நாட்டுக்கு ஏற்ற வகைகள் என்னென்ன என்ற ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்கலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தமிழ் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் திராட்சைப் பயிருக்கு உகந்த பருவ நிலை இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இந்த மாவட்டத்தில் திராட்சைப் பயிர் செய்தால் மிக நல்லது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. எல்லா மாவட்டங்களிலும் திராட்சைப் பயிரிட நன்ருக இருக்கும் காரணத்தால் நல்ல மகசூல் கிடைக்கிறது. ஊக்கப்படுத்துவதற்கு திட்டம் ஒன்றும் இல்லையென்று சொன்னேன்.

திரு. கோ. இளங்கோவன் : திராட்சைப் பயிரிட ஆகின்ற செலவு ஏக்கருக்கு மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் ; மாவட்டத்திற்கு மாவட்டம் செலவு வேறுபடுகிறது என்ற காரணத்தால்தான் அந்தந்த மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகள் அவர்கள் கொடுக்கின்ற கடன் தொகையை வேறு வேறு விதமாக நிர்ணயித்திருக்கிருர்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாகக் கூட்டுறவு வங்கியில் டெக்னிகல் செல் இருக்கிறது. அவர்கள்தான் திராட்சைப் பயிருக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கிருர்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிருர்கள்.

பாதிரிவேடு விவசாய கிடங்குக் கட்டடம்

*731 வினு— திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், பாதிரிவேடு கிராமத்தில் உள்ள விவசாயத் துணைக் கிடங்கிற்குக் கட்டடம் கட்டித் தருவதில் ஏற்படும் காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) பாதிரிவேடு கிராமத்தில் உள்ள விவசாயக் கிடங்கிற்கு கட்டிடம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : பாதிரிவேடு வட்டாரத்திலுள்ள விவசாயிகள் 15 மைல் தூரம் சென்று ஒன்றியத்தின் தலைநகரத்தில் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தக் கிடங்கினை விரிவான அளவில் விரைவாகக் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?